**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, கரூர்.</u>**

**<u>முன்னிலை</u>** : திரு. M. சார்லஸ் ஆல்பர்ட், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்–2, கரூர்.

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை

**<u>சுருக்குவிசாரணை வழக்கு எண்.3405/2025</u>**

**அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
வெள்ளியணை காவல் நிலையம்.
**(காவல்நிலைய குற்ற எண். 223/2024).** ... முறையிடுபவர்.

**.../ எதிர்/...**

தினேஷ்குமார், த/பெ. ராமசாமி ... எதிரி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 19.08.2025–ம் தேதியன்று கோப்பில் எடுக்கப்பட்டு, இன்று வரையில் என் முன்பாக விசாரணைக்கும், எனது பரிசீலனையிலும் இருந்து வந்தும், இறுதியாக 11.06.2026–ம் தேதியன்று அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர்–நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தாமாக முன்னிலையாகியும் எதிரி தெரிவித்த ஒப்புதல் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் 11.06.2026–ம் தேதி இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 18.05.2024–ம் தேதி 12.30 மணிக்கு வெள்ளியணை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட செல்லாண்டிபட்டி இரயில்வே பாலம் அருகில் இவ்வழக்கின் எதிரி தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட கேரள மாநில லாட்டரி சீட்டுகள் ரூ.60/– மதிப்புள்ள KL 16, 18, 21, 36, 89 என்று வரிசை எண்கள் எழுதப்பட்ட லாட்டரிகளை ஒரு வெள்ளை துண்டு பேப்பரில் எழுதிய விற்பனை செய்த குற்றத்தை செய்துள்ளார். எனவே உம்மீது வெள்ளியணை காவல் ஆய்வாளர் உம்மீது ச/பி. 7(3) LOTTERIES REGULATION ACT 1998–ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு BNSS 230 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீது பிரிவு– 7(3) LOTTERIES REGULATION ACT 1998–ன் –இன் கீழ் குற்றச்சாரம்சம் எடுத்துக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தை தன்னிச்சையாக ஒத்துக்கொண்டுள்ளார்.

3. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீது ச/பி.

7(3) LOTTERIES REGULATION ACT 1998–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

4. முடிவாக எதிரியின் மீது ச/பி. 7(3) LOTTERIES REGULATION ACT 1998–ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும், முன் வழக்கு எதுவும் இல்லை என்றும், தண்டனையை குறைத்து தருமாறும் வேண்டினார்.

5. முடிவில், எதிரியின் பதிலைக் கருத்தில் கொண்டு எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி. 7(3) LOTTERIES REGULATION ACT 1998 நிரூபிக்கப்பட்டு, கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு ச/பி. 7(3) LOTTERIES REGULATION ACT 1998 –ன் கீழான குற்றத்திற்கு அபராதம் **ரூ.1000/–**மும், 1 வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து பா.நா.சு.ச பிரிவு 275–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கின் மொத்த அபராதம் தொகை ரூ.1000/–

6. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆர்.பி.எண். 283/2026 – ல் கண்டுள்ள வழக்கு சொத்துக்களான, ஒரு வெள்ளை பேப்பரில் ரூ.60 மதிப்புள்ள KL 16, 18, 21, 36, 96 என்று எழுதப்பட்ட துண்டு பேப்பர் 5 சீட்டுகளை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்கு பின்னிட்டு உரிய முறையில் அழிக்க உத்தரவிடுப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026– ம் ஆண்டு ஜுன் மாதம் 11–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M CHARLES ALBERT — Digitally signed by M CHARLES ALBERT

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கரூர்.**